# த.வெ.க.வினரின் அராஜகம் - அத்துமீறல்கள் - சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது!

# ஆச்சரியக் குறிகளின் அட்டகாசங்கள் தலைவிரித்தாடும் கொடுமை!

### ‘நான் அமைச்சர் அதிகாரத்துக்கு உரியவன்’ என கூறி கும்பலாகப் புகுந்து

## அணைக்கட்டு அரசு மருத்துவமனையில் த.வெ.க. மாவட்டச் செயலாளர் அலப்பறை!

### அமைச்சர் ஆனந்த் உத்தரவு என மிரட்டல்! பிஜிஎம் மியூசிக்குடன் இன்ஸ்டாவில் ரீல்ஸ்!



வேலூர், மே. 23-

அணைக்கட்டு அரசு மருத்துவமனையில் த.வெ.க. மாவட்ட செயலாளர் ஆய்வு செய்வதாக கும்பலாக புகுந்து அலப்பறை செய்ததோடு, அமைச்சர் ஆனந்த் உத்தரவால் இந்த ஆய்வு நடத்தப்பட்டதாக மிரட்டி உள்ளார். மேலும் இன்ஸ்டாகிராமில் பிஜிஎம் மியூசிக்குடன் ரீல்ஸ் போட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தவெக தலைவர் ஜோசப் விஜய் தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்ற நிமிடம் முதலே அக்கட்சி நிர்வாகிகள் ரீல்ஸ் டீமுடன் அரசு அலுவலகங்களில் நுழைந்து செய்யும் அட்டகாசம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் அவதூறு வழக்கில் கைதான தென்காசி மாவட்ட தவெக மருத்துவ அணி அமைப்பாளர் வாசுதேவி, ஆய்வு செய்வதாக ரீல்ஸ் டீமுடன் நுழைந்து செய்த அட்டகாசம் தமிழகம் முழுவதும் பேசு பொருளானது. இதேபோல், அம்மா உணவகத்தில் ஆய்வு செய்வதாக உணவு சாப்பிட்டு அங்கிருந்தவர்களை மிரட்டும் தொனியில் எச்சரிக்கை விடுப்பதை வீடியோவாக எடுத்து பிஜிஎம் போட்டு தவெக மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ரிலீஸ் போட்டு வருகின்றனர்.

அந்த வரிசையில், தவெக வேலூர் மேற்கு மாவட்ட செயலாளர் வேல்முருகன், திருப்பதி சென்று மொட்டை போட்டு வந்தவுடன், ரீல்ஸ் டீமுடன் கும்பலாக வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தாலுகா அரசு மருத்துவமனையில் ஆய்வு என்ற பெயரில் நேற்று முன்தினம் நுழைந்தார். அதிகாரிகளிடம் ‘நான் தவெக மாவட்ட செயலாளர். அமைச்சர் அதிகாரத்துக்கு உரியவன். அண்ணன் புஸ்ஸி ஆனந்த் உத்தரவின்படி எங்கு வேண்டுமானாலும் ஆய்வு செய்வேன்’ என்று மிரட்டல் தொனியில் கூறி பதிவேடுகளை வாங்கி, பெண் ஊழியரிடம் கேள்விமேல் கேள்வி கேட்டு துளைத்தெடுத்துள்ளார். தொடர்ந்து அனைத்து வார்டுகளிலும் சென்று நோயாளிகளிடம் விசாரணை செய்துள்ளார்.

இதை அவருடன் வந்த டீம் வீடியோவாக படம் பிடித்தனர். பார்மஸி, கழிவறைகள் உள்ளிட்ட எல்லா இடத்துக்கும் சென்று பார்த்து வீடியோ ஷூட் எடுத்துள்ளனர். இதையறிந்த மருத்துவ அதிகாரிகள், உடனடியாக உயர் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் அணைக்கட்டு அரசு மருத்துவமனையை ஆய்வு செய்த வீடியோவை ரீல்ஸாக எடிட் செய்து பிஜிஎம் மியூசிக்குடன் சமூக வலைதளங்களில் மாவட்ட செயலாளர் வேல்முருகன் பரவ செய்துள்ளார். இதை பார்த்த சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் இவர்களை ஆரம்பத்திலேயே களையெடுக்க வேண்டும் என்று கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி மருத்துவத் துறை அதிகாரிகள், ‘எங்களது 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சர்வீஸில் இது போன்ற அனுபவம் எங்களுக்கு இப்போதுதான் ஏற்பட்டுள்ளது’ என்று வேதனை தெரிவித்தனர். இதுபற்றி வேலூர் மாவட்ட மருத்துவப்பணிகள் இணை இயக்குனர் (பொறுப்பு), பியூலா, ‘மக்கள் பிரதிநிதிகளாக இல்லாதவர்கள் இதுபோன்று அரசு மருத்துவமனைக்குள் ஆய்வு என்று நுழைவது தவறு. இதுதொடர்பாக எங்கள் உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்படும்’ என்றார்.

### சட்டமன்றத் தேர்தலில் குழந்தைகளைத் தூண்டிவிட்டு பிரச்சாரம்!

## விஜய் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தேர்தல் ஆணையத்தில் புகார்!

சென்னை, மே.23-

தலைமை தேர்தல் ஆணையருக்கு மூத்த பத்திரிகையாளர் அரவிந்த்தாக்சன் எழுதியுள்ள கடிதத்தில், கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் தேதி சென்னை நந்தனத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய த.வெ.க. தலைவர் விஜய், சட்டமன்றத் தேர்தலில் குழந்தை களை தூண்டி விட்டு த.வெ.க.வுக்கு பிரச்சாரம் செய்ததாக கூறியுள்ளார்.

த.வெ.க.வுக்கு வாக்களிக்குமாறு தங்கள் பெற்றோர்களையும் உறவினர்களையும் வலியுறுத்த வேண்டும் என, குழந்தைகளுக்கு விஜய் நிர்ப்பந்தத்தி தாக குறிப்பிடப்பட்டுள்ளது. குழந்தை களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட, இந்த பிரச்சாரமானது தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின் கீழ் கடுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளை ஒரு அரசியல் கருவியாகப் பயன்படுத்துவது சட்டப்படி குற்றமாகும் என்று அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் பரவி வரும் ஏராளமான காணொலிகளில், சிறார்கள் அழுதுகொண்டும், கதறிக்கொண்டும், கூச்சலிட்டுக் கொண்டும், அடம் பிடித்துக்கொண்டும் இருப்பது காணப்படுகிறது இதன் மூலம், அவர்கள் தங்கள் பெற்றோர்களையும் குடும்பத்தில் உள்ள வயது வந்த உறுப்பினர்களையும் TVK விற்கு வாக்களிக்குமாறு நிர்ப்பந்திப்பது தெரிவதாக அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தங்கள் கோரிக்கையை பெற்றோர்கள் நிறைவேற்றாவிட்டால், குழந்தைகள் சாப்பிடக் கூட மறுப்பதாகவும், மேலும், குழந்தைகள் தங்கள் பெற்றோர்களை மிரட்டுவது போன்ற காட்சிகள் சமூக வலைதளங்களில் இடம் பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, சட்டமன்றத் தேர்தலில் குழந்தைகளை தூண்டிவிட்டு பிரச்சாரம் செய்த விஜய் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்த கடிதத்தில் மூத்த பத்திரிகையாளர் அரவிந்த் தாக்சன் புகார் தெரிவித்துள்ளார்.

இதே கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திலும் புகார் அளிக்கப்பட்டுள்ளது. த.வெ.க.வுக்கு வாக்களிக்கும்படி பெற்றோரை நிர்பந்திக்க வேண்டும் என குழந்தைகளை தூண்டி விட்ட விஜய்க்கு எதிராக ஏற்கனவே உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### அரசு அலுவலகத்தை ஆக்கிரமித்து த.வெ.க.வினர் ஆலோசனைக் கூட்டம்!

## அரசு தளவாடப் பொருட்களை பயன்படுத்தியதாக சர்ச்சை!

### ஆண்டிப்பட்டி அருகே பரபரப்பு!



தேனி, மே 23-

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஒக்கரைப்பட்டி ஊராட்சியில், அரசு விதிமுறைகளை தலைகீழாக தூக்கி எறிந்துவிட்டு, அரசு அலுவலக வளாகம் மற்றும் அரசுக்கு சொந்தமான நாற்காலி, மேஜைகளை பயன்படுத்தி தனியார் அரசியல் கட்சியினர் ஆலோசனை கூட்டம் நடத்திய சம்பவம் பொதுமக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒக்கரைப்பட்டி ஊராட்சியில் கிராம மக்கள் பயன்பாட்டிற்காக ஊராட்சி ஒன்றிய அலுவலகமும், அதன் முன்பாக நாடக மேடையும் அமைந்துள்ளது. இவை இரண்டும் ஒரே வளாகத்தில் அடுத்தடுத்து அமைந்துள்ளன. இந்த நிலையில் நேற்று முன்தினம் (20ஆம் தேதி), தமிழக வெற்றி கழகத்தின் (த.வெ.க) உள்ளூர் நிர்வாகிகள் இந்த நாடக மேடையில் திடீரென ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தனர்.

அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களைத் திரட்டி, கிராமத்தில் உள்ள குறைகளைக் கேட்டறியும் ஆலோசனைக் கூட்டம் என்ற பெயரில் இக்கூட்டம் நடைபெற்றது. இதற்காக, அருகில் இருந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குள் புகுந்த அக்கட்சியின் நிர்வாகிகள், அங்கிருந்த அரசுக்குச் சொந்தமான அதிகாரப்பூர்வ மேஜைகள் மற்றும் நாற்காலிகளை எவ்வித அனுமதியுமின்றி வெளியே எடுத்து வந்து தங்களின் சுயவிளம்பரக் கூட்டத்திற்குப் பயன்படுத்தியுள்ளனர். அரசு அலுவலகப் பொருட்களை வெளியே கொண்டுவந்து, ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் நிர்வாகிகள் அமர்ந்து கொண்டு பொது மக்களிடம் மனுக்களை வாங்கியதும், குறைகளைக் கேட்டறிந்ததும் அங்கிருந்த நடுநிலையாளர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

**100 நாள் வேலை பணியாளர்கள் மிரட்டி வரவழைப்பா?**

குறிப்பாக, இந்த கூட்டத்தில் பொதுமக்கள் யாரும் தன்னிச்சையாகப் பங்கேற்கவில்லை என்றும், ஊராட்சி செயலர் கவிதா தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, அந்த ஊராட்சியில் 100 நாள் வேலை (மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்) பார்க்கும் பெண் பணியாளர்களைக் கட்டாயப்படுத்தி இந்த அரசியல் கூட்டத்திற்கு அழைத்து வந்து அமர வைத்ததாக கூறப்படுகிறது. அரசு திட்டப் பணியாளர்களை அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்தியது அப்பகுதி மக்களிடையே பெரும் கொந்தளிப்பைஏற்படுத்தியுள்ளது.

**விதிமுறைகள் அப்பட்டமாக மீறல்:**

மக்களால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர் இல்லாமல், ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சியின் நிர்வாகிகள் எப்படி அரசு அலுவலகம் முன்பு ஆக்கிரமித்து, அரசு அலுவலகப் பொருட்களையும், வளாகத்தையும் தங்களின் சொந்தக் கட்சி நிகழ்ச்சிக்கு தன்னிச்சையாகப் பயன்படுத்தலாம்? என்ற கேள்வி எழுந்துள்ளது. அரசு சொத்துக்களைத் தவறாக பயன்படுத்தியும், அரசு பணியாளர்களைத் திசைதிருப்பியும் நடத்தப்பட்ட இந்த விதிமுறை மீறல் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து த.வெ.க தரப்பில் விசாரித்தபோது, “தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்டச் செயலாளர் உத்தரவின் பேரில், அந்தந்த கிராமங்களில் உள்ள மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் குறைகளைக் கேட்டறிந்து மனுக்களைப் பெறுவதற்காகவே இந்த ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது” என்று மழுப்பலாகக் கூறினர்.

**அதிகாரியின் விநோத விளக்கம்:**

இதுகுறித்து ஒக்கரைப்பட்டி ஊராட்சிச் செயலாளர் கவிதாவிடம் விளக்கம் கேட்டபோது, அவர் ஒரு விநோதமான விளக்கத்தை அளித்தார். அவர் கூறுகையில், “ஊராட்சி அலுவலகமும் நாடக மேடையும் அடுத்தடுத்து இணைந்துதான் அமைந்துள்ளது. வழக்கமாகப் பொதுமக்கள் மற்றும் அமைப்பினர் அனைவரும் அந்த இடத்தில்தான் நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். ஆனால், த.வெ.க கூட்டத்தில் பயன்படுத்தப்பட்ட மேஜை, நாற்காலிகள் அனைத்தும் ஊராட்சி அலுவலகத்திற்குச் சொந்தமானவை அல்ல; அவை வெளியில் இருந்து கொண்டு வரப்பட்ட மாற்றுப் பொருட்கள்” என்று கட்சியினரைக் காப்பாற்றும் நோக்கில் கூறினார். ஆனால், கட்சி நிர்வாகிகளுடன் சேர்ந்து அந்த கூட்டத்தில் ஊராட்சி செயலர் கவிதாவும் நேரடியாகப் பங்கேற்றிருந்தது குறிப்பிட த்தக்கது.

இருப்பினும், ஊராட்சிச் செயலாளரின் இந்த விளக்கத்தை அப்பகுதி மக்கள் முற்றிலுமாக மறுக்கின்றனர். ஊராட்சி அலுவலகத்தில் உள்ள அரசு முத்திரை பதிக்கப்பட்ட மேஜைகளும் கோப்புகளும் அப்பட்டமாகப் பயன்படுத்தப்பட்டதை அங்கிருந்தவர்கள் நேரில் பார்த்ததாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

அரசு சொத்துக்களையும், அரசு அலுவலக வளாகத்தையும் அரசியல் ஆதாயத்திற்காகத் துஷ்பிரயோகம் செய்த த.வெ.க நிர்வாகிகள் மீதும், இதற்குத் துணை நின்றதோடு, 100 நாள் வேலை பணியாளர்களைக் கூட்டத்திற்கு அழைத்து வந்து அலட்சியமாகச் செயல்பட்ட ஊராட்சிச் செயலாளர் கவிதா மீதும் மாவட்ட நிர்வாகம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உடனடியாகத் தீவிர விசாரணை நடத்தி, தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசு அலுவலகத்தில் விதி மீறி தவெகவினர் ஆலோசனை கூட்டம் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே ஒக்கரைப் பட்டியில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், அதன் முன்பாக நாடக மேடையும் அமைந்துள்ளது. தவெக உள்ளூர் நிர்வாகிகள், இந்த நாடக மேடையில் நேற்று முன்தினம் திடீரென ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தனர். இதில் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களைத் திரட்டி, கிராமத்தில் உள்ள குறைகளைக் கேட்டறியும் ஆலோசனைக் கூட்டம் என்ற பெயரில் இக்கூட்டம் நடைபெற்றது.

இதற்காக, அருகில் இருந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குள் புகுந்த அக்கட்சியின் நிர்வாகிகள், அங்கிருந்த அரசுக்குச் சொந்தமான அதிகாரப் பூர்வ மேஜைகள் மற்றும் நாற்காலிகளை எடுத்து வந்து பயன்படுத்தியுள்ளனர். இதில் ஊராட்சி செயலர் கவிதா அதிகாரத்தைப் பயன்படுத்தி, 100 நாள் வேலை திட்டத்தில் வேலை பார்க்கும் பெண் பணியாளர்களைக் கட்டாயப்படுத்தி அழைத்து வந்து அமர வைத்ததாக கூறப்படுகிறது. அரசு சொத்துக்களைத் தவறாக பயன்படுத்தியும், அரசு பணியாளர்களைத் திசைதிருப்பியும் நடத்தப்பட்ட இந்த விதிமுறை மீறல் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### விஜய்யைப் பற்றித் தவறாகப் பேசியதாகக் கூறி ரகளை;

## அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்து ரயிலை நிறுத்தி வாலிபர் அட்டகாசம்!

### கற்களை வீசி கண்ணாடியை உடைத்தார்!

கண்ணமங்கலம், மே 23 -

விஜய்யை பற்றி பயணிகள் தவறாக பேசியதாக கூறி கண்ணமங்கலம் அருகே அபாய சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தி இறங்கிய வாலிபர் கற்கள் வீசி ரயில் கண்ணாடியை உடைத்ததோடு, பயணிகளையும் தாக்கினார். இதனால் ரயில்வே கேட் மூடப்பட்டு அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டு பரபரப்பாக காணப்பட்டது. புதுச்சேரியில் இருந்து ஹவுராவுக்கு நேற்றுமுன்தினம் சிறப்பு அதிவேக ரயில் புறப்பட்டது. நேற்று பிற்பகல் திருவண்ணா மலை போளூர் வழியாக கண்ணமங்கலம் அருகே ஒண்ணுபுரம் பகுதியில் திடீரென ரயில் நின்றது.

தொடர்ந்து ரயிலில் இருந்து சட்டை கூட அணியாமல், லுங்கியுடன் இறங்கிய வாலிபர் ரயில் மீதும், பயணிகள் மீதும் சரமாரியாக கற்களை வீசி தாக்கினார். இதில் ரயில் கண்ணாடி உடைந்தது. இதனால் ஹவுராவுக்கு செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில் ஒண்ணுபுரம் பகுதியில் சுமார் 20 நிமிடம் நின்றது. லோகோ பைலட் மற்றும் ரயில்வே அதிகாரிகள் சவந்து விசாரணை நடத்தினர். அதில் ரயில் மீதும், பயணிகள் மீதும் கற்களை வீசிய நபர் தான், அபாய சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தியது தெரியவந்தது. இதுபற்றி காட்பாடி ரயில்வே போலீசாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் வந்து விசாரணை நடத்தினர்.

இதில் கல்வீசியவர் தர்மபுரியை சேர்ந்த ஜோசப் மணி என்றும் இவர் ஒரு தனியார் பேக்கரியில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். திருவண்ணாமலை ரயில் நிலையத்தில் ரயிலில் ஏறியவுடன் சக பயணிகள் முதல்வர் விஜய்யை பற்றி தவறாக பேசிக்கொண்டிருந்ததால், ஆத்திரத்தில் இவ்வாறு செய்ததாக தெரிவித்துள்ளார். ஆனால் பயணிகள் அந்த வாலிபர் ரயிலில் ஏறியதும் தானாகவே பயணிகளை ஆபாசமாக பேசி ரகளையில் ஈடுபட்டு இது போன்று நடந்து கொண்டதாக தெரிவித்தனர். இதையடுத்து காட்பாடி ரயில்வே போலீசார் வழக்குப்பதிந்து ஜோசப் மணியை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனால் 20 நிமிடம் தாமதமாக ரயில் புறப்பட்டு சென்றது. இதற்கிடையில் கண்ணமங்கலம் ரயில்வே கேட், காவல் நிலையம் அருகே உள்ள ரயில்வே கேட், கொங்கராம்பட்டு கேட் ஆகிய மூன்றும் வழக்கமான நேரத்திற்கு மூடப்பட்டது. அரை மணி நேரம் சிக்னல் கிடைக்காததால் கேட்டுகளை திறக்க முடியவில்லை. இதனால் வேலூர் திருவண்ணாமலை சாலையில் கண்ணமங்கலம் பஜார் வரை, வேலூர் ஆரணி சாலையில் டோல் கேட் வரை என் கண்ணமங்கலம் போலீஸ் ஸ்டேஷன் அருகே உள்ள ரயில்வே கேட்டின் இருபுறமும் ஒரு கி.மீ தூரத்திற்கு வாகனங்கள் வரிசை கட்டி நின்றது. இதனால் போக்குவரத்து அரை மணி நேரம் ஸ்தம்பித்தது. பின்னர் சிக்னல் கிடைத்ததால் கேட்டுகளை திறந்தனர்.

## த.வெ.க. ஆட்சியில் தலைதூக்கும் லாட்டரி கலாச்சாரம்!

### ஆன்லைன் லாட்டரி விற்பனை - ஏழை, எளிய குடும்பங்கள் பாதிப்பு!

சென்னை, மே.23–

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி அமைந்த பின் லாட்டரி கலாச்சாரம் மீண்டும் தலைதூக்கி வருகிறது. ஆன்லைன் லாட்டரி விற்பனை தங்கு தடையின்றி அமோகமாக நடந்து வருவதால் ஏழை, எளிய குடும்பங்கள் சீரழிந்து வருவதாக புகார் எழுந்துள்ளது.

த.வெ.க. ஆட்சி அமைந்து இன்னும் இரண்டு வாரங்கள் கூட முடியவில்லை. அதற்குள் நாளொரு மேனியாக புதுப்புது பிரச்சினைகள் தமிழ்நாட்டில் அரங்கேறி வருகின்றன. ஒரு புறம் தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை சம்பவங்கள் மூலம் சட்டம், ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. இன்னொரு புறம் முற்றாக ஒழிக்கப்பட்டிருந்த லாட்டரி விற்பனை மீண்டும் தலைதூக்கி இருக்கிறது.

தமிழ்நாட்டில் லாட்டரி விற்பனைக்கு 2003 ஆம் ஆண்டு முதல் தடை இருந்து வருகிறது. அதே நேரத்தில், அண்டை மாநிலமான கேரளா மற்றும் சில வடமாநிலங்களில் லாட்டரி விற்பனைக்கு அனுமதி உள்ளது. இந்த நிலையில் தமிழ்நாட்டில் தமிழக வெற்றி கழக ஆட்சி அமைந்த உடன் சட்ட விரோதமாக ஆன்லைன் வாயிலாக லாட்டரி விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. லாட்டரி விற்பனையில் ஈடுபடும் சமூக விரோத கும்பல் புதிய யுக்தியை கையாண்டு வருகிறது. கேரளாவை தலைமை இடமாக கொண்டு செயல்படும் இந்த கும்பல், ஆன்லைன் லாட்டரி சீட்டு வாங்கினால், சில மணி நேரங்களில் கோடீஸ்வரர் ஆகலாம் என்று வாட்ஸ்அப் மூலம் வலை விரிக்கின்றனர். அவ்வாறு, ஆசையில் வருபவர்களை, லாட்டரி சீட்டு விற்பனை நிறுவனத்தின் வாட்ஸ் அப் குழுவில் இணைக்கின்றனர்.

ஏழை, எளிய மக்கள் கூலி தொழிலாளிகள் ஓட்டுநர்கள் என அடித்தட்டு வர்க்க குடும்பங்களை சீரழித்த லாட்டரி விற்பனை தமிழக வெற்றிக் கழக ஆட்சி அமைந்த உடன் மீண்டும் படுஜோராக நடந்து வருகிறது. இந்த ஆன்லைன் லாட்டரி சீட் விற்பனை போலீசாருக்கு தெரிந்தே நடைபெறுவதாகவும் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. லாட்டரி சீட் விற்பனையை தடுக்க வேண்டிய போலீசாருக்கு தடையின்றி மாமுல் கிடைப்பதால் இதனை தடுக்காமல் வேடிக்கை பார்த்து வருவதாகவும் சமூக ஆர்வலர்கள் புகார் கூறியுள்ளனர்.